# T20 Current Affairs

## for

# TNPSC

## Sep - 2022

Towards Your Success

**THULIRR IAS ACADEMY**

**# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,**

**Anna Nagar West, Chennai – 40**

**http://thulirracademy.in/ | Mobile # +91 9445065552 | Telegram: Thulirr Current Affairs**

## Table of Contents


தமிழக நிகழ்வுகள் ....3
இந்திய நிகழ்வுகள் ....5
பொருளாதாரம் ....8
உலக நிகழ்வுகள் ....8
சுற்றுச்சூழல் ....9
அறிவியல் & தொழில்நுட்பம் ....10
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ....11
திட்டம் ....12
மாநாடுகள் ....12
பாதுகாப்பு ....13
கூட்டுப்பயிற்சி ....14
விருதுகள் ....15
விளையாட்டு நிகழ்வுகள் ....16
புவிசார் குறியீடு ....16
புத்தகம் ....16
முக்கிய தினம் ....16



**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirraacademy.in/currentaffairs.php?ca_category=T20-T




**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## தமிழக நிகழ்வுகள்

- **சென்னை உயர்நீதி மன்ற பொறுப்பு தலைமை நீதிபதி – M. துரைசாமி நியமனம்**
  - ஷரத்து 214 – 231 இந்தியாவில் உள்ள உயர் நீதிமன்றங்களின் விதிகளைக் கையாள்கிறது.
  - தற்போது நாட்டில் 25 உயர் நீதிமன்றங்கள், இதில் 3 பொதுவான உயர் நீதிமன்றங்கள் உள்ளன.
  - ஷரத்து 217 நீதிபதிகள் நியமனம் பற்றி கூறுகிறது.
- **புதுமைப்பெண் திட்டம்**
  - தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கும் திட்டம்.
  - இத்திட்டம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார். இதில் சிறப்பு அழைப்பாளராக டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் பங்கு பெற்றார்.
  - 6 முதல் 12 வரை பயின்ற மாணவி மேல்படிப்பு படித்து முடிக்கும் வரை மாதம் 1000 ரூபாய் வங்கியில் செலுத்தப்படும், தமிழக அரசு ரூ.698 கோடி ஒதுக்கியுள்ளது.
  - ஏழைப்பெண்களின் திருமணத்துக்கு தாலிக்கு தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் வகையில், தமிழக அரசின் சார்பில் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்த்து. அண்மையில் இத்திட்டம் "மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டமாக மாற்றப்பட்டது."
  - ரூ.150 கோடியில் அடுத்த 4 ஆண்டுகளில் ஒவ்வொரு பள்ளியிலும் ஸ்மார்ட் வகுப்பறை உருவாக்கப்படும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் "புதுமைப்பெண் திட்டம்" தொடக்க விழாவில் தெரிவித்தார்.
- **செப்டம்பர் 5, 2022, 151-வது பிறந்த தினம்**
  - வ.உ.சிதம்பரனாரின் 151-வது பிறந்த நாள் விழா கோவை மத்திய சிறையில் நடைபெற்றது.
  - இந்திய சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது சிறையில் அவரை சித்திரவதை செய்யும் நோக்கில் செக்கு இழுக்க வைக்கப்பட்டார். அவர் இழுத்த செக்கு அங்கு உள்ள சிறை வளாகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளது.
- **முதல் மகளிர் காவல் நிலையம்**
  - தமிழகத்தில் முதன் முறையாக 1974-இல் காவல்துறையில் பெண்கள் சேர்க்கப்பட்டனர்.
  - 1992-இல் அதிமுக ஆட்சியில் மகளிர் காவல்நிலையம் தொடங்கப்பட்டது.
  - சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் முதல் அனைத்து மகளிர்காவல் நிலையம் தொடங்கப்பட்டது.
  - தற்போது (சென்னை C31 உள்பட) 222 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **பழங்குடியினர் பட்டியலில் நரிக்குறவர் சமூகம்**
  - 14 செப்டம்பர் அன்று, தமிழகத்தில் நரிக்குறவர்கள், குருவிக்கார்ர்கள் சமூகங்களைப் பழங்குடியினர் (ST) பட்டியலில் சேர்க்கும் அரசியல் அமைப்புச் சட்டத் திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
  - மேலும். ஹிமாச்சலப்பிரதேசத்தில் உள்ள ஹாட்டி சமூகத்தினர், சட்டீஸ்கரில் உள்ள பின்ஜியா சமூகத்தினர், கர்நாடகாவில் உள்ள பெட்டா-குருபா என்று அழைக்கப்படும் காடு குருபா சமூகத்தினர் ஆகிய சமூகத்தினரையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கான அரசியல் அமைப்புச் சட்டத்திருத்த மசோதாவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்த்து.
- **மதுரையில் ரூ.600 கோடியில் டைடல் பூங்கா: முதல்வர் அறிவிப்பு**
  - செப்டம்பர் 16, 2022 அன்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" தென்மண்டல மாநாடு மதுரையில் நடைபெற்றது. இம்மாநாட்டை முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார். அப்போது அவர் பல்வேறு திட்டங்களை துவக்கி வைத்தார்..
  - ரூ.600 கோடியில் 5 ஏக்கரில் இது அமைக்கப்படும். இரண்டாவது கட்டத்தில், மேலும் 5 ஏக்கரில் விரிவாக்கம் செய்யப்படும்.
  - கடந்த 2000-இல் அப்போதைய முதல்வர் மு. கருணாநிதி சென்னையில் திறந்து வைத்த டைடல் பூங்கா, தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பப் புரட்சியை ஏற்படுத்தியது.
- **கீழடியில் தந்தத்தால் ஆன பெரிய மணி**
  - சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்று வரும் 8-ஆம் கட்ட அகழாய்வில் தந்தத்தால் ஆன பெரிய மணி கண்டெடுக்கப்பட்டது.
  - கீழடி, கொத்தகை, அகரம் ஆகிய 3 இடங்களில் தமிழக தொல்லியல்துறை சார்பில் 8-ஆம் கட்ட அகழாய்வுப் பணி நடந்து வருகிறது.

THULIRR IAS ACADEMY
நுண்பொருள் காண்ப தறிவு | முயற்சி திருவினையாக்கும்
SINCE 2017
TNPSC
GROUP II / II A
ONLINE / OFFLINE MAINS TEST BATCH
ADMISSION GOING ON
CHENNAI - 9445065552 / 9445095552
KOVILPATTI - 9444206805 / 9444206905

❖ **தமிழகம் – மேகாலயா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

- தமிழகம் - மேகாலயா மாநிலங்களுக்கு இடையே சுகாதார துறையில் ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் குழந்தை நல அவசர சிகிச்சை பயிற்சி, உயிர்காக்கும் மயக்கவியல் திறன் பயிற்சி மற்றும் மீயொலி கருவி பயிற்சிகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- மதர் என்கிற திட்டம் ஒன்றை மேகாலயா அரசு கொண்டு வந்துள்ளது. அதே போல தமிழகத்திலும் கொண்டு வர அத்திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து கேட்டு அறிந்துகொண்டோம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

# இந்திய நிகழ்வுகள்

❖ **UNESCO பட்டியலில் துர்கா பூஜை**

- உலகின் கலாச்சார பாரம்பரிய நிகழ்வுகள் பட்டியலில் மேற்கு வங்கத்தின் துர்கா பூஜையை UNESCO அமைப்பு இணைத்துள்ளது.

❖ **மகசேசே விருது பெற கேரள முன்னாள் அமைச்சர் மறுப்பு**

- இந்த விருது, கேரள முன்னாள் சுகாதார மந்திரியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவருமான கே.கே.சைலஜாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதை அவர் ஏற்க மறுத்து விட்டார்.
- மறைந்த பிலிப்பைன்ஸ் அதிபர் ரமோன் மகசேசே நினைவாக பொதுசேவை, இலக்கியம், அமைதி, வளரும் தலைமை என பல துறைகளில் சிறப்பான பங்களிப்பு செய்வோருக்கு மகசேசே விருது வழங்கப்படுகிறது. இந்த விருது, ஆசியாவின் நோபல் பரிசு என்ற சிறப்புக்குரியது.

❖ **வங்கதேச விடுதலைப் போரில் உயிரிழந்த இந்திய வீரர்களின் வாரிசுகளுக்கு உதவித்தொகை.**

- “வங்க பந்து” முஜிபுர் ரஹ்மான் பெயரில் உதவித்தொகை வழங்கப்படும் என்று பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்தார்.
- கிழக்கு பாகிஸ்தானாக இருந்த பிராந்தியம் 1971 ஆண்டு போருக்கு பிறகு “வங்கதேசம்” தனி நாடானது.
- வங்கதேசத்தின் முதல் பிரமரும் ஷேக் ஹசீனா தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான் பெயரில் உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

❖ **இந்தியா – வங்கதேசம் இடையே 7 ஒப்பந்தங்கள்**

- முக்கியமாக குஷியாரா நதி நீரைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் கையொப்பமானது. அந்த ஒப்பந்தத்தின் காரணமாக அஸ்ஸாமின் தெற்குப் பகுதி மக்களும், வங்கதேசத்தின் சில்ஹட் பகுதி மக்களும் பலனடைவர் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இந்தியா – வங்கதேசம் இடையே 25 ஆண்டுகளுக்குப் பிறகு நதிநீர்ப் பகிர்வு ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது. கடைசியாக கங்கை நதி நீரைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் கடந்த 1996-ஆம் ஆண்டில் கையொப்பமானது.
- இந்தியா – வங்கதேசம் இடையே 54 நதிகள் எல்லை கடந்து பாய்கின்றன.
- இந்தியா – வங்கதேசம் இடையே பாயும் தீஸ்கா நதிநீரைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்பட வேண்டும்.
- தெற்காசியாவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக வங்கதேசம் திகழ்கிறது.
- அந்நாட்டுடனான இருதரப்பு வர்த்தகம் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் ரூ.7,000 கோடியில் இருந்து சுமார் ரு.14,000 கோடியாக அதிகரித்துள்ளது.
- இந்தியாவின் 4-வது மிகப்பெரிய ஏற்றுமதியாளராக வங்கதேசம் உள்ளது.
- கடந்த 2020 – 21 நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த 2021 – 22 நிதியாண்டில் 66% அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

❖ **கடமைப்பாதை**

- குடியரசுத் தலைவர் மாளிகை முதல் இந்தியா கேட் வரையிலான ராஜபாதை முழுவதும் மறுவடிவமைப்பு செய்யப்பட்டு, பெயர் மாற்றம் செய்யப்பட்ட "கடமைப் பாதை"யை (கர்த்தவ்ய பாதை) மோடி தொடக்கி வைத்தார்.
- மேலும் இந்தியா கேட் பகுதியில் சுதந்திர போராட்டத் தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 28 அடி உயரம் கொண்ட சிலையையும் பிரதமர் மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- தெலுங்கானா, கம்மம் குவாரியில் 280 மெட்ரிக் டன் எடை கொண்ட கருப்பு நிற மாபெரும் பளிங்கு கல் தேர்வு செய்யப்பட்டது.

❖ **தேசிய குற்ற ஆவண காப்பகம் வெளியிட்ட அறிக்கை**

- தேசிய குற்ற ஆவண காப்பகம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையின்படி, கடந்த 2021-ஆம் ஆண்டு முதியவர்கள் கொல்லப்பட்டதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டில் 2021-இல் 1,741 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 202 பேர் (11.3%)
- மகாராஷ்டிரா 2-வது இடத்தில் உள்ளது. 2021-இல் 2,142 கொலை வழக்குகளில் 181 முதியவர்கள் (7.8%) கொல்லப்பட்டுள்ளனர்.
- இந்தியாவில் மக்கள் தொகை அதிகம் உள்ள மாநிலமான உத்திரப்பிரதேசத்தில் 2021-இல் 3,717 பேர் கொல்லப்பட்டனர். அதில் 2.7% முதியவர்கள்.

❖ **வந்தே பாரத் ரயில் சோதனை ஓட்டம்**

- செப்டம்பர் 9 அன்று அகமதாபாத் – மும்பை இடையே 49 கிமீ தூரத்தை 5-மணி நேரத்தில் கடந்தது வந்தே பாரத் ரயில் சோதனை ஓட்டம் நடைபெற்றது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- "இந்தியாவில் தயாரிப்போம்" திட்டத்தின் கீழ் வந்தே பாரத் ரயில்கள் தயாரிக்கப்படுகின்றன.
- ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட வந்தே பாரத் ரயில் வாரணாசி – புதுடெல்லி இடையே இயக்கப்படுகிறது.

❖ **தொடக்க வேளாண் சங்கங்களின் எண்ணிக்கையை உயர்த்த முடிவு**

- நாட்டில் 65,000 உள்ள தொடக்க வேளாண் சங்கங்களின் எண்ணிக்கையை வரும் டிசம்பர் முதல் அடுத்த 5 ஆண்டுகளில் 3 லட்சமாக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது.
- 3 லட்சம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்படும் நாளில் நாட்டில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் இருக்கும். அவற்றை கணினிமயமாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.
- சுகாதாரம், காப்பீடு, போக்குவரத்து, சுற்றுலா போன்ற துறைகளில் கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்யும் வசதியுடன் ஒரு புதிய கூட்டுறவுக் கொள்கையை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.

❖ **அத்தியாவசிய மருந்துகள் தேசியப் பட்டியல் வெளியீடு**

- இந்தப்பட்டியலில் புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் (Antibiotic) (நுண்ணுயிர் எதிர்ப்பு) நோய்த் தடுப்பு மருந்துகள் உள்ளிட்ட 34 புதிய மருந்துகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன.
- பெண்டாமுஸ்டைன் ஹைட்ரோகுளோரைடு, இரினோடெகன் HCL டிரைஹைட்ரேட், லெனலிடோமைடு, லியூப்ரோலைடு அசிடேட் ஆகிய 4 முக்கிய புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளும்
- ஐவர்மெக்டின், முபிரோசின், மெரோபெனெம் ஆகிய தொற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- உலகளாவிய நோய்த் தடுப்புத் திட்டத்தில் (ரோட்டா வைரஸ் தடுப்பூசி) தடுப்பூசிகளும் இந்தப் புதிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது
- 2015-இல் கடைசியாக இந்தப்பட்டியல் வெளியிடப்பட்டது.

❖ **செப்டம்பர் 15 விசுவேசுவரய்யா 161-வது பிறந்த தினம்**

- இந்தியாவை மறுகட்டமைத்தல் மற்றும் இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதாரம் ஆகிய 2 புத்தகங்களை எழுதியுள்ளார்.
- இந்தியப் பொறியியலின் தந்தை, நவீன மைசூர் அரசின் தந்தை "இந்தியாவின் பொருளாதார திட்டமிடலின் முன்னோடி" என அழைக்கப்படுகிறார்.
- "நைட் கம்மாண்டர்", "பாரத ரத்னா" பட்டங்களை பெற்றுள்ளார்.

❖ **POCSO Act**

- இந்தியாவில் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சட்டமாகும்.
- 2012-ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் இருந்து வருகிறது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **புதிய தலைமை செயலகத்துக்கு அம்பேத்கரின் பெயர்**
  - தெலுங்கானா மாநிலத்துக்கு ஹைதராபாத்தில் புதிதாக கட்டப்படும் தலைமை செயலகத்துக்கு அம்பேத்கர் பெயர்.
- **பிரதமர் மோடி -பூடான் அரசர் வாங்சுக் சந்திப்பு**
  - இந்தியாவுக்கு வருகை தந்துள்ள பூடான் அரசர் ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சுக் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார்.
- **லோக்பால் (Lokpal & Lokayukta சட்டம்)**
  - லோக்பால் & லோக்ஆயுக்தா சட்டம் 2013-இன்படி 2019 ஆண்டு லோக்பால் (Lokpal) அமைப்பு செய்லபாட்டுக்கு வந்ததுடன், அதன் தலைவரும், பிற உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.
  - லோக்பால் தலைவர் நீதித்துறையைச் சார்ந்த 4 உறுப்பினர்கள் மற்றும் சாராத 4 உறுப்பினர்கள் கொண்டது.
  - முதல் லோக்பால் தலைவர் நீதிபதி பினாகி சந்திர கோஷ்.

## பொருளாதாரம்

- **உலகின் 5-வது பெரிய பொருளாதார நாடு இந்தியா**
  - உலகின் 5-வது பெரிய பொருளாதார நாடு இந்தியா, பிரிட்டனை முந்தியது.
  - அமெரிக்கா, சீனா, ஜப்பான, ஜெர்மனி ஆகிய நாடுகள் முறையே முதல் நான்கு இடங்களில் உள்ளது.
  - சர்வதேச நிதியத்தின் (IMF) தரவுகளின் அடிப்படையில் "புளும்பெர்க்" ஊடக நிறுவனம் இதனைக் கூறியுள்ளது.
- **தேசிய சரக்கு கையாளுகை கொள்கை**
  - நாடு முழுவதும் சரக்குகளைத் தடையின்றி எடுத்துச் செல்ல வழிவகுக்கும் தேசிய சரக்கு கையாளுகை (லாஜிஸ்டிக்ஸ்) கொள்கையை பிரதமர் மோடி வெளியிட்டார்.
  - திறன் மேம்பாடு, வணிகத்துறையிலும், இ-வே ரசீதுகளைச் செலுத்தும் இடங்களிலும் தொலைத்தொடர்பு ஆய்வுமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது..

## உலக நிகழ்வுகள்

- **பிரிட்டன் பிரதமர் – லிஸ் டிரஸ்**
  - மார்க்ரெட் தாட்சர், தெரசா மே அடுத்து பிரிட்டனின் 3-வது பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் – லிஸ் டிரஸ் – வாக்கு 81,326 (57.4%).
  - லிஸ் டிரஸ் கன்சர்வேடிவ் கட்சியில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தவர்
  - எதிர்த்து போட்டியிட்ட ரிஷி சுணக் (இந்திய வம்சாவளி) (60,399) (42.6%) கிடைத்தன.
- **விளாடி வோஸ்டாக் நகரில் தூதரகம் 30 ஆண்டுகள் நிறைவு**
  - ரஷியாவின் விளாடி வோஸ்டாக் நகரில் தூதரக அலுவலகத்தை தொடங்கிய முதல் நாடு இந்தியா.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- செப்டம்பர் 7, 2022 அன்றுடன் இந்திய தூதரகம் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன.
- ரஷியாவின் தூரக்கிழக்கு திட்டத்தில் எரிசக்தித் துறையில் மட்டுமின்றி மருந்து உற்பத்தி மற்றும் வைரம் பட்டைத் தீட்டுதல் உள்ளிட்ட துறைகளிலும் இந்தியா முதலீடு செய்துள்ளது. இந்தத் திட்டத்தில் ரஷயாவுடனான உறவை மேலும் வலுப்படுத்த இந்தியா ஆர்வமாக உள்ளது என்று பிரதமர் மோடி கூறினார்.

❖ **இரட்டைக் கோபுர தாக்குதல் நினைவு தினம்**

- 21ஆம் ஆண்டு (செப்டம்பர் 11, 2001) இரட்டைக் கோபுர தாக்குதல் நினைவு தினமாகும்.

❖ **ஷின்ஸோ அபே மறைவு**

- ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்ஸோ அபே (மறைவு). இவரின் இறுதிச்சடங்குக்கு பிரதமர் மோடி ஜப்பான் சென்றார்.
- ஜப்பான் பிரதமர் – ஃபுமியோ கிஷிடா.

## சுற்றுச்சூழல்

❖ **“லடாக்கில்” நாட்டின் முதல் “இரவு வான் சரணாலயம்”**

- நாட்டின் முதல் “இரவு வான் சரணாலயம்” லடாக்கின் ஹான்லேயில் அமைய உள்ளது.

❖ **நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம்**

- நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம் இந்தியாவின் முதல் மற்றும் முதன்மையான உயிர்க்கோளக் காப்பகமாகும், இது தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் நிறைந்த பாரம்பரியம் கொண்டது.
- மனிதன் மற்றும் உயிர்க்கோளம் திட்டத்தின் கீழ் செப்டம்பர் 1986 இல் யுனெஸ்கோவால் நீலகிரியின் உயிர்க்கோளக் காப்பகம் கொண்டுவரப்பட்டது.

❖ **காற்று மாசு புதுடெல்லி முதலிடம்**

- அமெரிக்காவைச் சேர்ந்த, ‘சுகாதார பாதிப்பு அமைப்பு’ என்ற ஆராய்ச்சி நிறுவனம், உலகளவில் 7,239 நகரங்களில் ஏற்பட்டுள்ள காற்று மாசு, நைட்ரஜன் டை ஆக்சைடு மாசு குறித்து ஆய்வு நடத்தி வெளியிட்ட அறிக்கையில் பி.எம். 2.5 துகள்களின் செறிவின் அடிப்படையில் உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகராக புதுடெல்லி இருக்கிறது.
- தற்போதைய நிலை தொடர்ந்தால் டெல்லி மக்களின் ஆயூட்காலம் 10.1 ஆண்டுகளும், உத்தரப்பிரதேச மக்களின் ஆயூட்காலம் 8.9 ஆண்டுகளும், பீஹார் மக்களின் ஆயூட் காலம் 7.9 ஆண்டுகளும் குறையும்.

❖ **சிவிங்கிப் புலிகள் (சீட்டா)**

- இந்தியாவில் அழிந்து போன இனமான சீட்டாவை பிரதமர் மோடி மீண்டும் அறிமுகப்படுத்தினார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- நமீபியாவில் இருந்து விமானம் மூலம் கொண்டுவரப்பட்ட 5 பெண் சிவிங்கிப் புலிகள் மற்றும் 3 ஆண் சிவிங்கிப் புலிகள், மோடியால் மத்திய பிரதேசத்தில் குனோ தேசிய பூங்காவில் விடப்பட்டன.
- நாட்டில் கடைசியாகக் காணப்பட்ட சிவிங்கிப் புலி, இன்றைய சத்தீஸ்கரில் கோரியா பகுதியில் கடந்த 1947-இல் கண்டறியப்பட்டது.
- இந்தியாவில் இந்த இனம் முற்றிலும் அழிந்து விட்டதாக கடந்த 1952-இல் அறிவிக்கப்பட்டது.

❖ **தீவிரமடைந்துவரும் காட்டுத்தீ**

- இந்தியாவில் ஏற்படும் 90% காட்டுத்தீ நிகழ்வுகள் மனிதனால் உருவாக்கப்பட்டவை என்று "Tropical Forest Science" இதழில் வெளியான ஆய்வு தெரிவிக்கிறது.
- காலநிலை மாற்றம் காட்டுத்தீயைப் பரவலாக்கி வருவதையும் மறுக்கமுடியாது.
- 2020-இல் மிசோரமில் ஏற்பட்ட காட்டுத்தீ அழிவின் வீரியம் அதிகம்.
- 2021 மார்ச் மாதத்தில், ஒடிசாவின் சிமிலிபால் உயிர்கோளக் காப்பகத்தில் ஏற்பட்ட காட்டுத்தீ அழிவின் வீரியம் அதிகம்.

❖ **இந்தியாவில் முதல் கடற்பசு (Dugong / Sea Cow) பாதுகாப்பகம்**

- இந்தியாவிலேயே முதன்முதலாக 448 சதுர கி.மீட்டர் பரப்பளவில், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளை உள்ளடக்கிய பாக்விரிகுடாவில், இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பு காப்பகத்தை (Dugong Conservation Reserve) நிறுவுவதற்கு தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.
- தமிழகத்தில் அழிந்துவரும் நிலையில் உள்ள மிக அரிதான கடற்பசு இனத்தையும் அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு மன்னார்வளைகுடா, பாக்விரிகுடா பகுதியில் "கடற்பசு பாதுகாப்பகம்" அமைக்கப்படும் என்று தமிழக அரசால் 2021 செப்டம்பர் 3ம் தேதி சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

❖ **ககன்யான் திட்டம் (விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டம்)**

- ரஷ்யாவிலும், இந்தியாவிலும் பயிற்சி பெற்று வந்த விண்வெளி வீரர்கள் கரோனா தொற்றால் பாதிக்கப்பட நேர்ந்ததால், இந்தத் திட்டம் தாமதமாகிறது. வரும் 2024-இல் ககன்யான் விண்கலம் விண்வெளிக்கு செலுத்தப்படும்.
- முதலாவது சோதனை விண்கலம் நிகழாண்டு விண்வெளிக்குச் செலுத்தப்பட உள்ளது. அதனை அடுத்த ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்படவுள்ள "வியோம் மித்ரா" என்ற பெண் உருவம் கொண்ட ரோபோ கண்காணிக்கும்.
- ககன்யான் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 4 விமானிகளை இந்திய விமானப்படை அடையாளம் கண்டுள்ளது. அவர்க்ளுக்கு ரஷ்யாவில் அடிப்படை பயிற்சியளிக்கப்பட்டது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- விண்வெளியின் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்படும் சோதனை விண்கலத்தின் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு, 2024-இல் புவியின் சுற்று வட்டப் பாதைக்கு 2 விண்வெளி வீரர்களை ISRO அனுப்பிவைக்கும் என்றார் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங்.
- கடந்த 2018 சுதந்திர தின உரையின்போது, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ரூ.10,000 கோடி மதிப்பிலான ககன்யான் திட்டத்தை பிரதமர் அறிவித்தார்.

❖ **நாசாவின் மோதலில் இருந்து பூமியை காக்கும் திட்டம்**

- 27 செப்டம்பர், 2022 அன்று எதிரிகாலத்தில் பூமியின் மீது விண்கற்கள் மோதி பேரழிவை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, அவற்றின் பாதையை மாற்றியமைக்க முடியுமோ என்பதை தெரிந்து கொள்வதற்காக அத்தகைய விண்கல் ஒன்றின் மீது செயற்கைகோள் ஒன்றை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான NASA, சோதித்தது.
- சோதனை பெயர் – “தி டபுள் ஆஸ்டிராய்ட் ரிடைரக்ஷன் டெஸ்ட் (டார்ட்) Double Asteroid Redirection Test (DART) Mission.
- அந்த சோதனை திட்டத்தின் கீழ், 160மீ விட்டம் கொண்ட டிமார்ஃபோஸ் என்ற விண்கல் மீது செயற்கைக்கோளை மோதச் செய்ய முடிவு செய்யப்பட்டது.
- அந்த விண்கல், டிடிமோஸ் என்ற 780மீ விட்டம் கொண்ட மிகப் பெரிய விண்கல்லுக்கு நிலவாக சுற்றிவருகிறது.
- இந்த நிலையில், டிமார்ஃபோஸ் மீது மோதுவதற்காக NASA அனுப்பிய செயற்கைக்கோள் 10 மாதங்களுக்குப் பிறகு அந்த விண்கல் மீது 27 செப்டம்பரில் மோதி சிதறியது.
- இந்த மோதலையும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றத்தையும் ஆய்வு செய்வதற்க்காக, இத்தாலிய விண்வெளி ஆய்வு நிறுவனம் தயாரித்த (LICIA) கியூப் செயற்கைக்கோள் டார்ட் செயற்கைக்கோளுடன் இணைக்கப்பட்டிருந்தது.
- அது டார்ட்டிலிருந்து கடந்த 11-ஆம் தேதி தனியாகப் பிரிந்து அதனை பின் தொடர்ந்தது.
- டிமார்ஃபோஸ் விண்கலம் மீது டார்ட் செயற்கைக்கோள் மோதுவதையும் அதனால் எழுந்த தூசி மண்டலத்தின் தன்மையையும் LICIA கியூப் செயற்கைகோள் பதிவு செய்து பூமிக்கு நேரடியாக அனுப்பி வருகிறது.

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

❖ **R. வெங்கட்ரமணி 16-வது அட்டர்னி ஜெனரல்**

- 16-வது இந்திய அட்டர்னி ஜெனரலாக (அரசு தலைமை வழக்கறிஞர்) R. வெங்கட்ரமணி நியமிக்கப்பட உள்ளார்.
- 15-வது இந்திய அட்டர்னி ஜெனரல் கே.கே. வேணுகோபால்.
- பதவிக்காலம் – 3 ஆண்டுகள்.

❖ **செப்டம்பர் 28 பகத்சிங் பிறந்தநாள்**

- சண்டிகர் விமான நிலையத்துக்கு பகத்சிங் பெயர் சூட்டப்படும் என்று “மனதின் குரல்” நிகழ்ச்சியில் மோடி தெரிவித்தார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **புதிய அட்டர்னி ஜெனரல் – R. வெங்கடரமணி**
    - புதிய அட்டர்னி ஜெனரலாக புதுச்சேரியைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் ஆர்.வெங்கடரமணி நியமிக்கப்பட்டுள்ளார்.
- **முப்படை தலைமைத் தளபதி – அனில் சௌஹான்**
    - முப்படைகளின் புதிய தலைமை தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் அனில் சவுகான் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - நாட்டின் முதல் முப்படை தலைமை தளபதியாக பிபின் ராவத்.

## திட்டம்

- **"P.M. – ஸ்ரீ" பள்ளிகள்**
    - நாடு முழுவதும் அனைவருக்குமான உயர்தரமான கல்வி வழங்கக்கூடிய திட்டம். 27,360 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது.
    - இத்திட்டத்தின் மூலம் 18.7 லட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாநாடுகள்

- **உலக பால்வள உச்சி மாநாடு (World Dairy Summit) - 2022**
    - சர்வதேச பால் பண்ணை கூட்டமைப்பின் உலக பால்வள உச்சி மாநாட்டை உத்திரப்பிரதேசம் கிரேட்டர் நொய்டாவில் பிரதமர் மோடி தலைமையேற்று தொடங்கி வைத்தார்.
    - 2014-இல் 14.6 கோடி டன்னாக இருந்த பால் உற்பத்தி தற்போது 21 கோடி டன்னாக (23%) அதிகரித்துள்ளது.
    - பால் உற்பத்தியில் உத்தரப்பிரதேசம் நாட்டிலேயே முதலிடம் பிடித்துள்ளது.
    - புரூசெல்லா தடுப்பூசி 2025-குள் 100% தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
    - அண்மைக்காலமாக குஜராத், இராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட சில மாநிலங்களில் தோல் கழலை (லம்பி ஸ்கின் நோய்) நோயால் கால்நடைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன.
- **22-வது ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு (SCO) மாநாடு**
    - 22-வது SCO மாநாடு உஸ்பெகிஸ்தானின் சமர்க்கண்ட் நகரில் தொடங்கியது.
    - இந்தியா, சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகியன ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகளாக உள்ளன. இந்த அமைப்பில் புதிதாக தற்போது ஈரானும் இணைந்துள்ளது.
- **உலகத் திருக்குறள் மாநாடு**
    - கம்போடியாவில் செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 3 வரை உலகத் திருக்குறள் மாநாடு நடக்க இருக்கிறது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **77-வது ஐ.நா(UN) பொதுச்சபை கூட்டம்**

- 77-வது ஐநா பொதுச்சபை கூட்டம் அமெரிக்காவில் நடைபெற்றது. இதில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.
- வீட்டோ (veto) அதிகாரம் உள்ள 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர் நாடுகள்: சீனா, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன்.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையில் நிரந்தர உறுப்பு நாடுகளாக இடம்பெற G-4 எனப்படும் இந்தியா , பிரேசில், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் முயன்று வருகின்றன.

## பாதுகாப்பு

❖ **தேஜஸ் 2.0 போர் விமான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- 10,000 கோடி நிதி ஒதுக்கவும் அனுமதி அளிக்கப்பட்டது,
- மத்திய அரசின் HAL தேஜஸ் M.K.1 ரக போர் விமானங்களை தயாரித்து வருகிறது.
- 123 தேஜஸ் போர் விமானங்களை தயாரிக்க விமானப்படை ஒப்பந்தம் வழங்கியுள்ளது.
- இதில் 30 விமானங்கள், விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
- அடுத்த கட்டமாக தேஜஸ் 2.0 திட்டத்தை செயல்படுத்த மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் DRDO மற்றும் HAL நிறுவனத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- அடுத்த 3 ஆண்டுகளில் தேஜஸ் மார்க் 2 மாதிரி விமானம் தயாராகி விடும் என்றும் வரும் 2030-இல் உற்பத்தி தொடங்கும் என்று மத்திய பாதுகாப்பு துறை வட்டாரம் தெரிவித்துள்ளது.
- தற்போது சேர்க்கப்பட்டுள்ள தேஜஸ் மார்க் 1 ரக விமானம் 3 டன் எடை கொண்டது.
- தேஜஸ் மார்க் 2 விமானம் 4 டன் எடை கொண்டதாகும். இதில் அதிநவின ஆயுதம், ரேடார்கள் பொருத்தப்பட உள்ளன.

❖ **வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் புதிய ஏவுகணை சோதனை வெற்றி**

- ஒடிஸா மாநிலம் சண்டீபூர் ஏவுதள மையத்தில், DRDO-வின் தரையிலிருந்து செலுத்தி அதிவேகத்தில் வான் இலக்கை தாக்கி அழிக்கும் (QRSAM) ஏவுகணை சோதனை வெற்றி பெற்றது.
- இலக்கை அதிவேகத்தில் தேடிச் சென்று துல்லியமாகத் தாக்கி அழிப்பது இந்த ஏவுகணை தொழில்நுட்பத்தின் சிறப்பு அம்சம்.
- இந்த ஏவுகணை தொழில்நுட்பத்தை இனி இராணுவத்தில் சேர்ப்பதற்கு ஏதுவாக, ஏவுகணை தொழில்நுட்பத்தில் இடம் பெற்றிருக்கும் Radio Frequency (RF) ஆய்வு தொழில்நுட்பம், நகரும் ஏவுதளம் முழுவதும் தானியங்க உத்தரவு மற்றும் கட்டுப்பாட்டு தொழில்நுட்பம், கண்காணிப்பு மற்றும் பன்முக செயல்பாட்டு ரேடார் உள்ளிட்ட இந்த ஏவுகணைத் திட்டத்தில் இடம்பெற்றிருக்கும். முழுவதும் உள்நாட்டில் மேம்படுத்தப்பட்ட அனைத்து துணை தொழில்நுட்பங்களின் செயல்பாடுகளும் இந்தச் சோதனை மூலமாக இறுதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

❖ **“தாராகிரி” – போர்க் கப்பல் வெள்ளோட்டம்**

➢ செப்டம்பர் 11, 2022 அன்று இந்திய கடற்படையின் “Project 17 A” (புராஜெக்ட் 17 ஏ) திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மூன்றாவது போர்க் கப்பலான தாராகிரி மும்பையில் கடலில் முதல்முறையாக இறக்கப்பட்டது.

➢ இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட முதல் போர்க் கப்பல் “நீலகிரி” (28 செப்டம்பர், 2019) மற்றும் 2-வது போர்க் கப்பல் “உதயகிரி” (மே 17, 2022) - ல் அறிமுகம் செய்யப்பட்டுவிட்டது.

➢ ரூ.25,700 கோடி செலவில் இந்திய கடற்படையின் “புராஜெக்ட் 17ஏ” திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே (மும்பையில் உள்ள மஸகான் கப்பல் கட்டும் நிறுவனம்) 4 போர்க் கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன.

❖ **BRAHMOS ஏவுகணை ஏற்றுமதி**

➢ இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணைகளை வாங்க பிலிப்பைன்ஸ் கடந்த ஜனவரியில் ரூ.2,983 கோடிக்கு ஒப்பந்தம் செய்தது.

➢ இந்திய விமானப் படையில் பழமையான போர் விமானங்கள் நீக்கிவிட்டு 123 தேஜஸ் விமானங்களை இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் HAL வழங்கப்பட்டிருக்கிறது.

➢ இதுவரை 30 தேஜஸ் போர் விமானத்தை மேம்படுத்தி தேஜஸ் 2.0 போர் விமானத்தை தயாரிக்க மத்திய அரசு அண்மையில் அனுமதி வழங்கியது.

❖ **INS VIKRANTH**

➢ உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விமானந்தாங்கி போர்க்கப்பலான INS VIKRANTH கடந்த செப்டம்பர் 2-ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

➢ 2019-ஆம் ஆண்டில் செயற்கைக்கோள்களை தாக்கி அழிக்கும் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது.

➢ இதன்மூலம் செயற்கைக்கோளை அழிக்கும் வல்லமை படைத்த அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் வரிசையில் 4-வதாக இந்தியா இணைந்திருக்கிறது.

➢ 2021–22 – இந்தியாவின் ஆயுத ஏற்றுமதி ரூ.13,000 கோடியை தொட்டுள்ளது.

➢ 2025-ஆம் ஆண்டு ரூ.35,000 கோடி ஏற்றுமதியை எட்ட மத்திய பாதுகாப்பு அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

## கூட்டுப்பயிற்சி

❖ **வோஸ்டாக் (Vostok)-2022,**

➢ வோஸ்டாக் எனும் பெயரில் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தியா போர் பயற்சி மேற்கொண்டது.

❖ **ஜிமெக்ஸ் (Jimex) - 22**

➢ ஜப்பான்- இந்தியா இடையிலான ஆறாவது கடல்சார் பயிற்சி 2022, இந்தியக் கடற்படையால் வங்கக் கடலில் நடைபெற்றது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# விருதுகள்

- **மகசேசே விருது-2022**
  - “செதியாரா சிம்” (மனநல மருத்துவர்), பெர்னடெட் மேட்ரிட் (பிலிப்பின்ஸ் மருத்துவர்) ஆகிய இருவருக்கும் “ஆசியாவின் நோபல் பரிசு” என்று அழைக்கப்படும் பிலிப்பின்ஸின் மகசேசே விருது வழங்கப்பட்டுள்ளது.
  - கம்போடியாவில் அரசின் அடக்குமுறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய மனநல மருத்துவர் “செதியாரா சிம்”
  - வன்கொடுமைக்குள்ளான ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு உதவிய பிலிப்பின்ஸ் மருத்துவர் பெர்னடெட் மேட்ரிட்
- **விஷ்ணுபுரம் விருது**
  - 2022-ஆம் ஆண்டுக்கான “விஷ்ணுபுரம் இலக்கிய விருது” எழுத்தாளர் சாரு நிவேதிதாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- **தாதா சாகேப் பால்கே விருது 2022 - இந்தி நடிகை ஆஷா பரேக்**
  - இந்திய திரையுலகின் தந்தை தாதா சாகேப் பால்கேவின் பெயரில் இந்திய திரைத்துறையில் சிறந்து விளங்குவோருக்கு (வாழ்நாள் சாதனை) மிக உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்படும்.
  - 68-ஆவது (2022) தேசிய திரைப்பட விருது நிகழ்ச்சியில் முதுபெரும் இந்தி நடிகை ஆஷா பரேக்குக்கு இவ்விருது வழங்கப்படும்.
  - 1992-இல் இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
  - 2019-இல் ரஜினிகாந்துக்கு வழங்கப்பட்டது.

THULIRR
IAS ACADEMY
நுண்பொருள் காண்ப தறிவு | முயற்சி திருவினையாக்கும்
TNPSC
GROUP I / II / IIA / IV & VAO
ONLINE / OFFLINE CLASSES
ADMISSION GOING ON
CHENNAI - 9445065552 / 9445095552
KOVILPATTI - 9444206805 / 9444206905

## விளையாட்டு நிகழ்வுகள்

❖ **U.S ஓபன் டென்னிஸ் சாம்பியன்**

- அமெரிக்காவில் நடைபெற்ற U.S. ஓபன் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியா சாம்பியன் பட்டம் வென்றார்.
- கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் 3-ஆவது இளம் சாம்பியன் (19 வயது) உலகின் நம்பர் 1 இடத்தைப் பிடித்த முதல் பதின்ம வயது வீரர் ஆகிய சாதனையை அவர் எட்டியிருக்கிறார்.

## புவிசார் குறியீடு

❖ போச்சிம்பள்ளி புடவைக்கு புவிசார் குறியீடு

- தெலுங்கானா மாநிலம் பூதன்போச்சிம்பள்ளி என்ற இடத்தில் போச்சிம்பள்ளி புடவை தயாரிக்கப்படுகிறது.
- 2005-இல் இதற்கு GI புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.
- 2017-18-ஆம் ஆண்டில் உலக பாரம்பரிய சின்னமாக UNESCO தற்காலிக பட்டியலில் இடம்பெற்றது.

## புத்தகம்

❖ **"தி இந்தியா வே: ஸ்ட்ரடஜீஸ் ஃபார் ஆன் அன்சர்டன் வர்லட்"** (The India Way: Strategies for an Uncertain World) என்ற புத்தகத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் S.ஜெய்சங்கர் எழுதியுள்ளார்.

❖ **"அம்பேத்கரும் மோடியும்" – புத்தகம்**

- முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வெளியிடுகிறார்.
- புளூகிராஃபிட் டிஜிட்டல் ஃபவுண்டேஷன்" இந்த நூலை தொகுத்துள்ளது.

## முக்கிய தினம்

1. செப்டம்பர் 1 முதல் 7 வரை தேசிய ஊட்டச்சத்து வாரம்
2. செப்டம்பர் 5 - சர்வதேச தொண்டு நாள்
3. செப்டம்பர் 5 - ஆசிரியர் தினம் (டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்தநாள்)
4. செப்டம்பர் 8 - உலக தூய்மை தினம்
5. செப்டம்பர் 8 - உலக எழுத்தறிவு நாள்
6. செப்டம்பர் 11 - தேசிய வன தியாகிகள் தினம்
7. செப்டம்பர் 11 - தேசிய ஹிந்தி தினம்
8. செப்டம்பர் 15 சர்வதேச ஜனநாயக தினம்
9. செப்டம்பர் 15 - தேசிய பொறியாளர் தினம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

10. செப்டம்பர் 16 - உலக ஓசோன் தினம்
11. செப்டம்பர் 17 - சமூகநீதி நாள்
12. செப்டம்பர் 18 - சர்வதேச சிவப்பு பாண்டா தினம்
13. செப்டம்பர் 18 - உலக நீர் கண்காணிப்பு தினம்
14. செப்டம்பர் 21- மறதி நோய் விழிப்புணர்வு நாள் (உலக அல்சைமர் தினம்)
15. செப்டம்பர் 21 - சர்வதேச அமைதி தினம்
16. செப்டம்பர் 21 - ஜீரோ உமிழ்வு தினம்
17. செப்டம்பர் 26 - உலக நதிகள் தினம்
18. செப்டம்பர் 26 - உலக சுற்றுச்சூழல் சுகாதார தினம்
19. செப்டம்பர் 27 - உலக சுற்றுலா தினம்
20. செப்டம்பர் 29 - உலக இதய தினம்
21. செப்டம்பர் 29 - சர்வதேச உணவு இழப்பு மற்றும் கழிவு பற்றிய விழிப்புணர்வு தினம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com